**செய்தி வெளியீடு எண்: 096** **நாள்: 05.02.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், தேசிய பெண் குழந்தை தினத்தை முன்னிட்டு, பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பணியாற்றிய பெண் குழந்தைக்கு மாநில அரசின் விருது வழங்கிடும் வகையில், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி கே.ஆர். ரக்ஷனா அவர்களுக்கு 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் பாராட்டு பத்திரமும் வழங்கினார்கள்.

பெண் குழந்தைகள் வாழ்வில் ஏற்றம் பெற, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு, வீரதீர செயல்புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைக்கு 2018–ஆம் ஆண்டு முதல் தேசிய பெண் குழந்தை தினத்தில் மாநில விருதாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டு பத்திரம் வழங்கி வருகிறது.

அதன்படி, இவ்வாண்டு, கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், இராமேஸ்வரபட்டி கிராமத்தைச் சேர்ந்த செல்வி கே.ஆர். ரக்ஷனா, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை கரூர் மாவட்டம் முழுவதும் நடுவதற்காக நன்கொடையாக வழங்கியது, நூற்றுக்கும் மேற்பட்டவர்களை கண் தானம் செய்வதற்காக ஊக்குவித்தது, முதலுதவி சிகிச்சை முறைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது, உலக வெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது, மரங்களின் வேர்களுக்கு நேரடியாக தண்ணீர் பாய்ச்சும் புதிய முறையை அறிமுகப்படுத்தியது, பொருளாதார காரணத்தினால் பள்ளிப் படிப்பை இடைநிறுத்திய மூன்று மாணாக்கர்களின் கல்வியை தொடர்வதற்காக தன் பெற்றோர் மூலமாக நிதியுதவி வழங்கியது ஆகிய பணிகளை பாராட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் செல்வி கே.ஆர். ரக்ஷனா அவர்களுக்கு மாநில அரசின் விருதாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் பாராட்டு பத்திரமும் வழங்கினார்கள்.

குழந்தை பாலின விகிதத்தை மேம்படுத்திடவும், பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை உயர்த்திடவும் “பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” என்ற திட்டம் மத்திய அரசால் 2015–ஆம் ஆண்டு முதல்

நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தினை, பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, பள்ளிக் கல்வித்துறை, சமூக பாதுகாப்புத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆகிய துறைகளுடன் இணைந்து சமூக நலத்துறை செயல்படுத்தி வருகிறது.

“பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்தி திட்ட இலக்கினை அடைந்ததற்காக, இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய பெண் குழந்தைகள் தினமான 24.1.2019 அன்று புதுடில்லியில், மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாட்டிற்கு தேசிய விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

மேலும், புதுடில்லியில் நடைபெற்ற மேற்கண்ட விழாவில், மாவட்ட அளவில், திட்டம் சார்ந்த விழிப்புணர்வை பள்ளிக் குழந்தைகள், பொதுமக்கள், கல்லூரி மாணவ, மாணவியரிடையே சென்றடையும் வகையில் சிறப்பான நடவடிக்கைகள் எடுத்தமைக்காக, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு “மேம்பட்ட சமூகப் பங்கேற்பு” என்ற பிரிவின் கீழ் தேசிய விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.எஸ். கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் உள்ளார்.

தனக்கு நடக்கவிருந்த குழந்தை திருமணத்தை துணிச்சலுடன் போராடி நிறுத்தியதற்காக, 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் மாநில விருது பெற்ற செல்வி ந. நந்தினி, 24.1.2019 அன்று புதுடில்லியில், மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை சார்பில் நடைபெற்ற விழாவில், “பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” திட்டத்திற்கான உள்ளூர் சாதனையாளராக (Local Champion) அறிவிக்கப்பட்டதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை செல்வி ந. நந்தினி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர் வெ. சரோஜா, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப., சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**